SOFA-I-M

# முதலாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - எட்டு - __________ நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. சரியான விடையை எழுதுக.** 10 × 1 = 10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______________

   அ) வைப்பு ஆ) கடல் இ) ஆழி

2. பறவைகள் ______________ பறந்து செல்கின்றன.

   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில்

3. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற காரணமாக அமைந்தது ____________

   அ) இசைக்கலை ஆ) நுண்கலை இ) அச்சுக்கலை

4. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ______________

   அ) எ, ஏ ஆ) இ, ஈ இ) உ, ஊ

5. செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ______________

   அ) கடல் ஆ) ஓடை இ) குளம்

6. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ______________ யும் ஓட்டிவிடும்.

   அ) காலனை ஆ) பாலனை இ) ஆற்றலை

7. ‘இருதிணை’ - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

   அ) இரு + திணை ஆ) இரண்டு + திணை இ) இருவர் + திணை

8. ‘நீளுழைப்பு‘ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) நீண்ட + உழைப்பு ஆ) நீள் + உழைப்பு இ) நீள் + அழைப்பு

9. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________

   அ) பருத்தியெல்லாம் ஆ) பருத்திஎல்லாம் இ) பருத்திதெல்லாம்

10. நெடுமை + தேர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________

    அ) நெடுத்தேர் ஆ) நெடுந்தேர் இ) நெடுதேர்

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

11. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
12. உலகம் எவற்றால் ஆனது?
13. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
14. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
15. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?

16. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

17. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

**III. மனப்பாடப் பாடல்.** 4 + 2 = 6

18. ‘வாழ்க’ எனத் தொடங்கும் ‘தமிழ்மொழி வாழ்த்து’ப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

19. ‘தக்கார்’ எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

20. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

21. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

22. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

23. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

24. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 × 2 = 10

25. சொல் பொருள் தருக.

அ) வைப்பு ஆ) திரிதல் இ) நாணம் ஈ) விண்ணம்

26. அகரவரிசைப்படுத்துக.

(எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம், ஈசன், ஐயம்)

27. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) கோழி ______________ (கூவும், கொக்கரிக்கும்)
ஆ) பால் ______________ (குடி, பருகு)
இ) சோறு ______________ (தின், உண்)
ஈ) பூ ______________ (கொய், பறி)

28. குறளை சரியான சொல்லைக் கொண்டு நிரப்புக.

விலங்கொடு ______________ அணையர்______________
கற்றாரோடு ஏனை யவர்.

29. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக.

(பூ, மரம், வாழ்த்து, மாதம், கிழமை, ஈ, பசு, படம், கடல், கை, பக்கம், பா)

| கள் | க்கள் | ங்கள் |
|---|---|---|
| | | |
| | | |

**VI. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 5 = 5

30. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

உங்கள் பாடப்பகுதியில் உள்ள மனப்பாடத் திருக்குறள் மூன்றினை அடிபிறழாமல் எழுதுக.